செ.வெ.எண்: 25/2017 நாள்: 10.01.2017

# பத்திரிக்கை செய்தி

2016-2017-ம் ஆண்டிற்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்ட கிராம பஞ்சாயத்துகளில் உள்ள ஏழை மக்களில் பரம ஏழைப்பெண்களுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கிட டிசம்பர் -2016-ம் மாதத்திற்கு அகஸ்தீஸ்வரம், இராஜாக்கமங்கலம், தோவாளை, குருந்தன்கோடு, மேல்புறம், முஞ்சிறை, தக்கலை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலும் ஜனவரி-2017-ம் மாதத்திற்கு தோவாளை, திருவட்டார், தக்கலை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலும் பிப்ரவரி-2017-ம் மாதத்திற்கு கிள்ளியூர், முஞ்சிறை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலும் பயனாளிகள் சிறப்பு கிராம சபா கூட்டம் மூலம் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

அதனை தொடர்ந்து முதல் சிறப்பு கிராமசபா கூட்டம் டிசம்பர்-2016-ம் மாதத்திற்கானது 11.01.2017-அன்று இரவிபுதூர்,கரூம்பாட்டுர்,ஆத்திக்காட்டுவிளை, பீமநகரி, கக்கோட்டுத்தலை, தேவிக்கோடு, மலையடி, அடைக்காகுழி, சடையமங்கலம் ஆகிய பஞ்சாயத்து அலுவலகங்களில் வைத்து நடைபெறும். ஜனவரி-2017-ம் மாதத்திற்கான கூட்டம் 12.01.2017-அன்று அருமநல்லூர், அருவிகரை, ஆத்திவிளை ஆகிய பஞ்சாயத்து அலுவலகங்களில் வைத்து நடைபெறும். மற்றும் பிப்ரவரி-2017 மாதத்திற்கான கூட்டம் 13.01.2017 அன்று இணையம்புத்தன்துறை, கொல்லாஞ்சி, சூழால், குளப்புறம் ஆகிய பஞ்சாயத்து அலுவலகங்களீல வைத்து நடைபெறும்.

எனவே சம்பந்தப்பட்ட கிராமங்களில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பரம ஏழை பெண் பயனாளிகள் தங்களது விண்ணப்பங்களை வழங்கி பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.